**ஒதுக்கீட்டுத் தலைப்பு 126 – கல்வி அமைச்சு தொடர்பான 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கல்வி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்கு

### 2.1 ஒதுக்கீட்டுக்கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 198,586 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 60,511 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 138,076 மில்லியன் அல்லது 69.53 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டுவருபவை | 167,250 | 45,396 | 121,854 | 72.86 |
| மூலதனம் | 31,336 | 15,115 | 16,222 | 51.77 |
| **மொத்தம்** | **198,586** | **60,511** | **138,076** | **69.53** |

### 2.2 முற்பண கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கான 12601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1,600 | 1,115 | 950 | 969 | 3,000 | 1,950 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 939.5 மில்லியன் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6003/0000/00/0006/0064/000 | 0.1 |
| 6000/0000/00/0001/0128/000 | 24.4 |
| 6000/0000/00/0002/0180/000 | 13.6 |
| 6000/0000/00/0013/0139/000 | 109.5 |
| 6000/0000/00/0016/0012/000 | 791.9 |
| **மொத்தம்** | **939.5** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்களின் பதிவேடு | 1978 திசெம்பர் 18 ஆந் திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணனிகள் துணைப் பொருட்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 (1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை.

------------------------------------------------------------------

வியாங்கொடை சியனே கல்விக் கல்லூரி அமைந்துள்ள 85 ஏக்கர்களை உள்ளடக்கிய கணனியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை.

## 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள்

-----------------------------------------------------------------------------------

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 25 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐய வினாக்கள் தொடர்பான கணிப்பிடபக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 7,413,041,192 அக இருந்தது.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

-----------------------------------

### 3.4.1 பாதீட்டு முரண்கள்

-------------------------------

பின்வரும் அவதகனிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 14 ஆந் திகதிய 08/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படயாகக் கொண்டு தேவையான கட்டு நிதி எல்லைகளைக் குறிப்பிட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த எல்லைகள் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளின் பிரகாரம் அந்த அந்த மாதங்களில் எதிர்பாக்கப்பட்டவாறு அமைச்சுக்களுக்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தால் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருக்காமை, தேவைப்பாட்டை இனங்காணாது நிதி ஏற்பாடுகளை வழங்கியிருந்தமை என்பவற்றின் காரணமாக பின்வரும் பாதீட்டு முரண்கள் அவதானிக்கப்பட்டன.

1. 15 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 543,507,652 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

2. 54 மூலதன செலவு விடயங்களுக்காக அதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 14,385,510,890 ஆக இருந்ததுடன் அவை அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தன.

3. 09 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு நிதி ஏற்பாடாகிய ரூபா 121,354,335,000 முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சு வருடாந்த மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும். 2016 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் அமைச்சின் 126-2-4-1-1407 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க முதலீடுகளை பேணுதல் கிரயமானது காணிகள் மற்றும் கட்டிடங்களாக ரூபா 121,352,000,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. பெயரளவு பெறுமதியாக காட்டப்பட்டுள்ளதன் காரணமாக நிதி ஏற்படு விடுவிக்கப்படாததனால் அதனை ஒரு செலவாக கணக்கீடு செய்யும் தேவைப்பாடு இல்லை என தேசிய பாதீட்டு திணைக்களத்தால் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 3.5 பொதுவைப்புக் கணக்கு

---

ரூபா 13.7 மில்லியன் கூட்டு மொத்தமான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமானங்கள் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

12601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக இடம் பெற்ற பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகள் ரூபா 215,969,889 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 113,308,141 கூட்டு மொத்தமான கடன் மீதிகளை அறவீடு செவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்கள் திணைக்கள ஏடுகள் மற்றும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 777,811 கூட்டுமொத்தமான தீர்த்துவைக்கப்படாத பிழைகள் காணப்பட்டன.

(இ) தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அமைச்சுக்கு வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய மீதிகளாக ரூபா 160,620,071 காட்டப்பட்டிருந்தும் பெறவேண்டியுள்ள கடனின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அது ரூபா 162,084,164 ஆகும். அதற்கிணங்க ரூபா 1,464,093 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே இனங்காணப்படாத வித்தியாசம் ரூபா 5,301,749 ஆகும்.

**3.7 நல்லாட்சியும் கணக்களித் தன்மையும்**

**3.7.1 உள்ளகக் கணக்காய்வு**

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மேற்கொண்ட பரிசோதனைகளின் அறிக்கைகள் அல்லது ஐய வினாக்களின் பிரதிகளில் அதிகளவானவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த அறிக்கையை 2017 செப்ரம்பர் 04 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது 2015 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2016 நவம்பர் 16 ஆந் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் முதலாவது அல்லது இரண்டாவது கால அட்டவணையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையானது 2017 மார்ச் 17 அல்லது 2017 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை 178 தேசிய பாடசாலைகள், 40 ஆசிரியர் நிலையங்கள், 35 கணனி நிலையங்கள் மற்றும் ஒருகொடவத்த பத்தலகெதர களஞ்சியங்கள் என்பவற்றின் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் ஒருகொடவத்த மற்றும் பத்தலகெதர களஞ்சியங்களைத் தவிர்த்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினர்களால் அத்து மீறிப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள்**

அமைச்சின் தேசிய பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், தேசிய கல்வியற் கல்லூரிகள் என்பவற்றிக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 04 பேச்சஸ் இலிருந்து 224 பேச்சஸ் வரையான வீச்சுடைய இடப் பிரமாணத்துடனான நகரப்பகுதியில் அமைந்துள்ள 80 காணிகள் அங்கீகாரமும் உத்தரவும் இன்றி வெளித்தரப்பினர்களால் அத்துமீறி பயன்படுத்தப்பட்டதுடன் அதிக பெறுமதிகளைக் கொண்ட சில காணிகளின் பரப்பளவு, நிகழ்காலப் பெறுமதி ஆகிய தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை.

**(இ) ஒப்படைக்கப்படாத சொத்துக்களை முறையற்றவகையில் பயன்படுத்துதல்**

பாதுகாப்புச் சேவைகள் கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 1.9329 ஹெக்டயர் அளவான காணியில் 2008 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 1,098,236,071 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கல்லூரிக் காணியின் சட்டரீதியான உரிமையை கல்வி அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) தீர்ததுவைக்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 85,901,912 ஆகும்.

## 3.9 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பனவற்றுக்கான தொடர்புகள் | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| தாபன விதிக் கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | | தாபன விதிக் கோவையின் பிரகாரம் பதிற்கடமை செய்யும் உத்தியோகத்தராக இருந்தாலும் நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை தற்காலிக அடிப்படையில் மாத்திரம் நியமிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும் 2017 ஆகஸ்ட் 30 அந் திகதி வரை நாடு முழுவதும் அமைந்துள்ள 352 தேசிய பாடசாலைகளிலும் 228 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்காக கடமையை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். |
| XLVII ஆம் அத்தியாயத்தின் II ஆவது தொகுதியின் 1.2, | | i 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் முறையீனங்கள் மற்றும் பல்வேறு துர்நடத்தைகளின் காரணமாக பாடசாலை முறைமையில் தீர்க்கப்படாதுள்ள |

| | | |
|---|---|---|
| 13.2 மற்றும் 17.12 ஆம் பிரிவுகள் | | ஒழுக்காற்றுப் பிரச்சினைகளின் அளவு 343 ஆகும். அவற்றுள் 69 அதிபர்களுக்கும் 274 ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பதவியினர்களுக்குரிய பிரச்சினைகளாகும் |
| | ii | உரிய காலத்தில் ஒழுக்காற்று நவடிக்கைகளை தாமதமின்றி பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய போதிலும் 2016 செப்தெம்பர் 20 ஆந் திகதி இலங்கை கல்வி நிருவாகச் சேவையின் iii ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று கட்டளை 2017 மே 16 ஆந் திகதி வரையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | iii | ஒழுக்காற்று விசாரணைகளை தாமதமின்றி பூர்த்திசெய்யாமையானது ஒய்வு பெறுவதற்குத் தீர்மானித்துள்ள உத்தியோகத்தர்களுக்கான இளைப்பாற்று பணிக்கொடையும் படிகளும் பதவியுயர்விற்கு தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு அச்சந்தர்ப்பங்கள், சம்பள ஏற்றங்களும் ஏனைய சலுகைகளும் கிடைக்கும் உரிமை என்பன தமதமடைவதற்கு அல்லது இழப்பதற்கு காரணமாக இருந்தது உண்மையிலேயே தவறுகள் செய்த உத்தியோகத்தர்களுக்கு நீண்டகாலமாக அனைத்து சலுகைகளும் கிடைக்கப் பெறுவதனால் அச்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. |
| | iv | கல்வியின் தரம், மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நடத்தைகள் என்பவற்றை சிறப்பான முறையில் பேணுவதற்கு தேவையான கொள்கைரீதியான |

நடவடிக்கை எடுத்தல் அமைச்சின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். பாடசாலைகளில் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பாக மிக விரைவாக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி தண்டனைகள் வழங்க வேண்டிய போதிலும் அவ்வாறு விரைவாக நடவடிக்கை எடுக்காமையும் அவர்களை ஏனைய பாடசாலைகளுக்கு விடுவிக்கின்றமையும் அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்காது உரிய பாடசாலைக்குள்ளேயே வைத்திருப்பதுவும் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், உளரீதியான நிலைமையைப் போல பாடசாலைகளின் ஒழுக்கம் வீழ்ச்சியடையும் நிலைமையும் உருவாகியுள்ளது.

| | |
|---|---|
| xiiஆவது அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் பிரகாரம் விடுமுறைக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது 35 தேசிய பாடசாலைகளில் 198 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரால் அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 5,072 ஆகும். |
| vii ஆவது அத்தியாயத்தின் 2ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டின் போது 143 தேசிய பாடசாலைகளில் 712 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியினர் 15,973 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையை பெற்றுக் கொண்டிருந்த போதிலும் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii)

கல்வியமைச்சின் சுற்றறிக்கை

-----------------------------

2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை

உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் 10/2377/436/052 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏதாவது ஒரு அரசாங்கப் பாடசாலையில் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலம் சேவையாற்றியுள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்யவேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது அதற்கிணங்க இடமாற்றம் செய்யப்படாத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

1. 193 தேசிய பாடசாலைகளில் 5905 ஆசிரியர்கள் 08 ஆண்டுகளுக்கும் 27 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது ஒரே பாடசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

2. 152 தேசிய பாடசாலைகளின் 873 ஆசிரியர்கள் அவர்கள் நியமனம் பெற்றுக் கொண்ட பாடத்திற்கு புறம்பான பாடங்களை கற்பிப்பதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. விசேடமாக 36 தேசிய பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளாத 137 ஆசிரியர்கள் ஆரம்பத் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

2016 சனவரி 01 ஆம் திகதி 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை

i. சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 183 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 2,361 ஆசிரியர் பற்றாக்குறைகளையும் 163 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 1,527 ஆசிரியர் மிகைகளையும்

குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii சுற்றறிக்கையில் தரப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய பாடசாலை ஒன்றின் பிரதி அதிபர்களுக்கு ஒரு வாரத்திற்கு 10 பாடவேளைகளேனும் கற்பித்தல் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்படவேண்டிய போதிலும் 101 தேசிய பாடசாலைகளில் 225 பிரதி அதிபர்களுக்கு ஒரு கால வேளையேனும் கற்பித்தல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் 05 தேசிய பாடசாடைகளின் 06 பிரதி அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால வேளைகளின் எண்ணிக்கை 02 இற்கும் 06 இற்கும் இடைப்பட்ட கால வீச்சுடையதாகக் காணப்பட்டது.

iii சுற்றறிக்கையில் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உதவி அதிபர்களுக்கு ஒரு வாரத்திற்கு 12 காலவேளையேனும் கற்பித்தல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 33 தேசிய பாடசாலைகளின் 69 உதவி அதிபர்களுக்கு ஒரு கால வேளையேனும் கற்பித்தல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் 06 தேசிய பாடசாலைகளின் 06 உதவி அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால வேளைகளின் எண்ணிக்கை 02 இற்கும் 06 இற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

iv சுற்றறிக்கையில் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு ஆககுறைந்தது 40 நிமிடங்கள் கொண்ட 35 காலவேளைகள் கற்பித்தல் நவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டிய போதிலும் 136 தேசிய பாடசாலைகளின் 769 ஆசிரியர்களுக்கு ஒரு கற்பித்தல் காலவேளையேனும் வழங்கப்பட்டிருக்காததுடன் 144 தேசிய பாடசாலைகளின் 1,075 ஆசிரியர்களுக்கு 16 கற்பித்தல் கால வேளையினை விட குறைந்த எண்ணிக்கையானவை வழங்கப்பட்டிருந்தன.

2016 சனவரி 7 ஆந் திகதி 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை

i ஒரு தேசிய பாடசாலைக்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதி அதிபர்களின் எண்ணிக்கையை மிகைத்து 55 தேசிய பாடசாலைகளுக்கு 99 பிரதி அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ii ஒரு தேசிய பாடசாலைக்கு நிர்ணயிக்கப்பட்ட உதவி அதிபர்களின் எண்ணிக்கையை மிகைத்து 28 தேசிய பாடசாலைகளுக்கு 61 உதவி அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

iii ஒரு தேசிய பாடசாலையின் மேற்பார்வை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஆகக்குறைந்தது 40 வினாடிகளிலான 16 கற்பித்தல் காலவேளைகள் ஒப்படைக்கவேண்டிய போதிலும் 14 தேசிய பாடசாலைகளின் 59 ஆசிரியர்களுக்கு ஒரு கால வேளையேனும் வழங்கப்படாதிருந்ததுடன் 12 தேசிய பாடசாலைகளின் 66 ஆசிரியர்களுக்கு 16 கற்பித்தல்

| | |
|---|---|
| | காலவேளைகளை விடக் குறைந்த எண்ணிக்கையானவையே வழங்கப்பட்டிருந்தன. |
| 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 37/2008 ஆம் இலக்க மற்றும் 2016 மே 16 ஆந் திகதிய 17/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒரு தேசிய பாடசாலையின் ஆரம்பத் தரத்திற்குச் சமமான வகுப்பில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 மற்றும் இரண்டாம் தத்திற்குச் சமமான வகுப்பில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது ஒரு வகுப்பிற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 40 ஆகவும் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த எல்லைகளை மிகைத்து 116 தேசிய பாடசாலைகளால் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 9639 ஆகும்.அதற்கு மத்தியில் பிரசித்தி பெற்ற பாடசாலைகளாகக் கருதப்படும் 32 தேசிய பாடசாலைகளால் உரிய எல்லைகளை மிகைத்து சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5,373 ஆகும். |
| 2012 நவம்பர் 23ஆந் திகதிய 42/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | நாட்டின் 09 மாகாணங்களில் விசேட கற்கை ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 411 ஆக இருந்ததுடன் விசேட கற்கை அசிரியர் பயிற்சியை பெற்றுக் கொண்ட 355 ஆசிரியர்கள் ஏனைய பாடசாலைகளில் அல்லது வகுப்பறைகளில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். |

## 3.10 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்

### (அ) அறிவு மன்றமாக பாடசாலைக் கல்வியை புனரமைத்தல் செயற்திட்டம்

2012 மே 18 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் 2012 ஒக்டோபர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாகாணம் மற்றும் வலயங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வலய வளவாளர்களுக்கு அறிவூட்டல் என்பவற்றிற்காக ரூபா 1.786 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந்நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவது சிக்கலாக இருந்தது.

(ii) விசேட தேவைப்பாடுள்ள மாணவர்களுக்காக வசதிகளை வழங்குவதற்காக ரூபா 0.5 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நிகழ்ச்சி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வருடாந்த திட்டத்தின் பிரகாரம் 40,000 புத்தகங்களை அச்சிடுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 356.58 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ஊவ மாகாணத்தின் குருதலாவ மத்திய கல்லூரி, ஆந்தா உல்பத மத்திய கல்லூரி, மஹியங்கன மத்திய கல்லூரி, விஸாகா வித்தியாலயம் என்பவற்றிற்குரிய கட்டிடங்களை நிர்மாணித்தல் அதற்கிணங்க பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்ட வேலைகளானது திட்டங்களின் பிரகாரம் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் 1,005 மஹிந்தோதைய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் 996 இன் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 15 இற்காக மின்சார வசதிகள் வழங்கப்படாதிருந்ததனால் மாணவர்களின் பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ள முடியாதிருந்தது. கண்டி மாவட்டத்திலுள்ள விக்னேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தில் ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டு மின்சாரம்

வழங்கப்பட்டிருந்த போதிலும் கணனி இணைய தள முறைமை, ஏனைய உபகரணங்கள் என்பன வழங்கப்படாமையின் காரணமாக மாணவர்களின் பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ள முடியாதிருந்தது.

(vi) தங்காலை மகளிர் கல்லூரியில் மஹிந்தோதைய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அந்த ஆய்வு கூடத்திற்கு 66 கணனிகளைத் தவிர்த்து ஏனைய அனைத்து பொருட்களும் வழங்கப்பட்டிருந்தன. அந்த வசதிகள் இல்லாமையின் காரணமாக கணனி கதிரைகளும் மேசைகளும் முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டமையின் காரணமாக அவை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைக்கு மாறியிருந்தது.

(vii) ரணபிம தேசிய கல்லூரியிலுள்ள ஆய்வு கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்த கணனி கதிரைகளும் நெனச பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த கதிரைகளும் தரத்திலும் நியமத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. நெனச பிரிவிலுள்ள 30 எண்ணிக்கையான கதிரைகளின் கைப்பிடி உடைந்து காணப்பட்டன. கணித ஆய்வு கூடத்தினதும் விஞ்ஞான ஆய்வு கூடத்தினதும் உபகரணங்களை மாற்றி பொருத்தியிருந்ததன் காரணமாக தேவைப்பாட்டிற்கு முறையாகப் பயன்படுத்த முடியாதிருந்தது.

(viii) கிரிபத்கும்புற சுவர்ணஜோதி தேசிய பாடசாலையிலுள்ள கணித ஆய்வு கூடத்திற்கு தேவையான அளவினை விட மேலதிகமாக கணித உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கே உயர்தர பௌதீக விஞ்ஞானத்தைக் கற்கின்ற மாணவர்கள் 08 பேர்களாகும். மேலதிகமான உபகரணங்களை ஏனைய பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கக் கூடியதாக இருந்த இந்த உபகரணங்களானது தேவையான அளவை உரிய முறையில் இனங்கண்டு கொள்ளாது பகர்ந்தளிக்கப்பட்டதன் காரணமாக சிக்கனமற்ற முறையில் பல இடங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. வழங்கப்பட்டுள்ள உபகரணங்களில் பல தரத்தில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

**(ஆ) கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

---

2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அதன் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த பணம் ஐக்கிய குடியரசு டொலர் 200 மில்லியனாக (ரூபா 26,000 மில்லியன்) இருந்ததுடன் 03 ஆண்டு காலத்துக்குள் பயன்படுத்தப்பட்ட மொத்த பணம் ஐக்கிய குடியரசு டொலர் 141 மில்லியன் (ரூபா 18,330 மில்லியன்) ஆகும். சதவீதத்தில் 70.5 சதவீதமாக இருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது கட்டிடங்களை பராமரித்தல், புனரமைத்தல் என்பவற்றிற்காக ரூபா 700 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 687,4 மில்லியன் தொகையான கடப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கி 5 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்த முடியாதிருந்தது.

(iii) நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 692 பாடசாலை அதிபர்களுக்கும் 780 பிரதி அதிபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டிருந்ததுடன் 228 தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் போது அதனை வெற்றிகரமான பரிகாரமாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(iv) நிகழ்ச்சித்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 250 மகிந்தோதய ஆய்வு கூடங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டப்பட்டிருந்தன. அவற்றில் 238 ஆய்வுகூடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 227 ஆய்வுகூடங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. 2017 ஆகஸ்ட் இறுதியளவில் 45 ஆய்வுகூடங்களுக்காக மூன்று வழி மின்சார வசதிகள் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(v) மாத்தறை மாவட்டத்திலுள்ள மஹானாக மஹா வித்தியாலயத்திற்காக தொழில்நுட்ப ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்தைக் கற்பதற்காக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) நாடு முழுவதும் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பதற்காக அதிக அளவிலான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது 327 ஆகக் காணப்பட்டதனால் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வது சிக்கலாகக் காணப்பட்டது.

(vii) தொழில்நுட்ப பாடங்களைக் கற்கின்ற 47,473 மாணவர்களும் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களைக் கற்கின்ற 117,382 மாணவர்களும் மீளாய்வாண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் முறையே 42,514 மற்றும் 118,901 ஆகக் காணப்பட்டது. வணிக பாடங்களைக் கற்பதற்காக மீளாய்வாண்டில் 111,883 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன் முன்னைய ஆண்டில் 117,238 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள்.

(viii) 2016 ஆம் ஆண்டின் போது க.பொ.த (உயர்தரம்)இற்காக தோற்றியிருந்த 211,865 பாடசாலை விண்ணப்பதாரர்களில் 17,702 விண்ணப்பதாரர்கள் அல்லது 8.36 சதவீதமானவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவில்லை. அனைத்து பாடங்களுக்குமாக A சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை 6,468 அல்லது 3.05 சதவீதமாகும். வணிக பாடங்களைக் கற்கின்றவர்களில் 69.64 சதவீதமானவர்களும் பௌதீகவியல் பாடத்தைக் கற்கின்றவர்களில் 53.26 சதவீதமானவர்களும் உயிரியல் விஞ்ஞானப் பாடத்தைக் கற்கின்றவர்களில் 53.35 சதவீதமானவர்களும் பல்கலைக்கழகத்திற்காக தகமைகளைப் பெற்றிருந்தார்கள். தொழில்நுட்ப பாடத்தை கற்கின்றவர்கள் உயர்தரத்திற்காக தோற்றிய இரண்டாவது ஆண்டாகிய மீளாய்வாண்டின் போது உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்தை கற்பவர்களில் 60.16 சதவீதமும் பொறியியல் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பவர்களில் 55.58 சதவீதமும் பல்கலைக் கழகத்திற்கான தகமைகளைப் பெற்றிருந்தார்கள்.

(ix) நிகழ்ச்சித்திட்ட இலக்கின் பிரகாரம், மீளாய்வாண்டில் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை 64 சதவீதம் வரை உயர்த்துவது குறிக்கோளாக இருந்த போதிலும் அது 62.17 சதவீதம் அளவில் காணப்பட்டதனால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய குடியரசு டொலர் 2.5 மில்லியன் மற்றும் வெளிநாட்டு பெறுவனவு உரிமை 1.66 மில்லியன் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(x) விஞ்ஞானம் மற்றும் வணிகப் பாடங்களைக் கற்பதற்காக மாணவர்களின் பங்களிப்பை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்காக இருந்த போதிலும் அது அடைந்து கொள்ளப்படாததனால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 5 மில்லியன் மற்றும் வெளிநாட்டுப் பெறுவனவு உரிமை 3.33 மில்லியன் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(xi) நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பதவியணியினரை பயிற்றுவிப்பதற்காக ரூபா 800 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றிலிருந்து குறுங்கால வெளிநாட்டு புலமைப்பிரிவில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையும் புதிய பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடம் தொடர்பாக ஏனைய நாடுகள் செயற்படும் முறைமை தொடர்பான பயிற்சிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையும் அச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xii) தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,320 மில்லியனில் ரூபா 685.66 மில்லியன் அல்லது 52 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(xiii) மீளாய்வாண்டிற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 80 மில்லியன் பணம் அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xiv) சிவில் பொறியியல் உபகரணம், மின்சாரப் பொறியியல் உபகரணம், தொழில்நுட்ப பொறியியல் உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 70 மில்லியன், ரூபா 30 மில்லியன் மற்றும் ரூபா 125 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அம் மூன்று வகையான உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 39.3 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததனால் ரூபா 82.6 மில்லியன் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உபகரணங்கள் இல்லாமையின் காரணமாக சில ஆய்வுகூடங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த முடியாதிருந்தது.

(xv) தங்காலை பாலிகா மஹா வித்தியாலயத்திற்கு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 யூலை இறுதி வரையும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஆய்வுகூடத்திற்கு தேவையான உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றை உரிய முறையில் வைத்திருப்பதற்கும் தேவைப்பாட்டின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(xvi) மீளாய்வாண்டின் இறுதியளவில் 353 பாடசாலைகள் உயர்தர வகுப்பில் தொழில்நுட்ப பாடத்தை கற்பித்தலை ஆரம்பித்திருந்ததுடன் 48,426 மாணவர்கள் அப்பாடத்தை பயில்வதனை தெரிவு செய்திருந்தார்கள்.

(xvii) 4 இலிருந்து 19 வரையான சிங்கள மொழி மூல மாணவர்கள் இருக்கும் 17 பாடசாலைகளுக்கும் 26 மாணவர்கள் வீதம் இருக்கும் 03 பாடசாலைகளுக்கும் இரண்டு ஆசிரியர்கள் வீதமும் 36 தமிழ் மொழி மூல மாணவர்கள் இருக்கும் பாடசாலைக்கு மூன்று ஆசிரியர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதற்கிணங்க உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்தை கற்பிப்பதற்காக முறைப்படியாக ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) யுனெஸ்கோ 2014 - 2015 இரு ஆண்டு செயற்திட்ட பிரேரணையை அமுல்படுத்துதல்**

---

யுனெஸ்கோ தலைமை அலுவலகத்தால் 2014-2015 காலத்திற்காக நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 யூலை 20ஆந் திகதி மானியமாக அமெரிக்க டொலர் 61,945 (ரூபா 8,269,557) பொரல்லையிலுள்ள இலங்கை வங்கியின் உயர் தர வங்கி கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(i) இலங்கையின் அதிபர் முன்விபரணம் தொடர்பாக ஆய்வு செய்து ஒரு கையேட்டினைத் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக 2016 யூன் 14 ஆந் திகதி ரூபா 3,468,463 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தி யுனெஸ்கோ தலைமையகத்திற்கு செலவு அறிக்கைகளையும் மிகுதியான பணத்தையும் திருப்பி அனுப்ப வேண்டியிருந்தது. 2016 யூலை 31 ஆந் திகதிக்குப் பின்னர் மீண்டும் காலத்தை நீடிப்பதற்கு யுனெஸ்கோ நிறுவனம் இணங்காததால் உரிய செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காபன் கழிவுப் பொருட்களை (காபன் டயொக்சயிட் மற்றும் பச்சை வீட்டு எரிவாயு) என்பவற்றை சுற்றாடலுக்கு விடுவிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான செயற்திட்டங்களுக்கு ரூபா 3,468,463 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 40 சதவீதமான ரூபா 1,387,385 தொகையானது 2016 சனவரி 08 ஆந் திகதி மத்திய சுற்றாடல் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.2016 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறு இச் செயற்திட்டத்தை முடிவுறுத்த வேண்டியிருந்ததுடன் அத்திகதியில் ரூபா 531,688 தொகையான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014-2015 இரண்டாண்டு திட்டத்தின் கீழ் 2016 யூலை 31 ஆந் திகதி முடிவுறுத்தப்படாத இச் செயற்திட்டத்திற்குரிய பணம் வங்கி கட்டணத்துடன் சேர்த்து யுனெஸ்கோ தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்காக 2016 திசெம்பர் 20 ஆந் திகதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க ரூபா 8,269,557 மொத்த பணத்தில் 87..45 சதவீதம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக காலத்துக்குப் பொருத்தமானதும் முக்கியமானதுமான இரண்டு தலைப்புக்களினூடாக அமுல்படுத்த வேண்டியிருந்த இரண்டு

செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் அவற்றிலிருந்து அடைந்து கொள்ளக் கூடியதாக இருந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

## 3.11 செயலாற்றல்

வருடாந்த பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) தனியார் பாடசாலைகள்

1961 இன் 08 ஆம் இலக்க சகாயமளிக்கின்ற பாடசாலைகள் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 25ஆவது பிரிவின் பிரகாரம் 05-14 ஆண்டு வயதெல்லைக்குப் பிந்தியமாணவர்களுக்கு கல்வியை வழங்குவதற்காக எத்தரப்பினாலும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என்ற போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் 214 எண்ணிக்கையான சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப் பாடசாலைகளின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களின் தரத்தை மதிப்பீடு செய்தலும் பாடவிதானங்களை அமுல்படுத்தலும் தேசிய கல்விக் கொள்கைக்குள் அவை நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்வதற்கும் அறிவுறுத்துவதற்கும் முறையான கொள்ளைகள் மற்றும் நியமங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்படவில்லை. விபரம் கீழே தரப்படுகின்றது.

(i) மேலே குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளின் விபரம் அமைச்சிடம் இல்லாதிருந்ததுடன் தேசிய கல்வி கொள்கைக்கு இணங்க சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் அமைச்சின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

(ii) அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாது நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ்வாறான பாடசாலைகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் இல்லாதிருந்தும் பாடசாலைகளை உருவாக்குவது தொடர்பாகவும் பாடசாலைகளை உருவாக்குவதற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் பிரமாணங்களைத் திருத்தம் செய்யாமை தொடர்பாகவும் கணக்காய்வின் போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

(iii) அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க நடாத்தப்பட்டு வருகின்ற 80 தனியார் பாடசாலைகள் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளாக குறிப்பிடப்பட்டிருந்தது. இவற்றில் 36 பாடசாலைகள் உதவி பெறுகின்ற பாடசாலைகளாகவும் 44 பாடசாலைகள் உதவி பெற்றுக்கொள்ளாத பாடசாலைகளாகவும் உள்ளதுடன் அப்பாடசாலைகளில் 114,070 மாணவர்களும் 4,713 ஆசிரியர்களும் உள்ளனர்.

(iv) அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் தமது தாய் நாட்டின் வரலாறு கலாச்சாரம், மொழி, ஒழுக்கநெறி தொடர்பான தரமான கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பாதுகாக்கப்படுகின்றதா என்பது தொடர்பாக மற்றும் பௌதீக வளங்களதும் மனித வளங்களதும் தரங்கள் மற்றும் அளவு என்பன பொதுக்கொள்கைக்குள் தீர்மானிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது விசாரனை செய்யப்பட்டது.

**(ஆ) சிசுஅருண கல்விசார் நிதியம்**

கல்வி அமைச்சினால் 2001 இலிருந்து 2014 வரையான காலத்தில் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற திறமையுள்ள ஆனால் பொருளாதார ரீதியாக கஸ்டமான நிலையிலுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் 5ஆம் தரத்தில் புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு பொருளாதார ரீதியாக மாதாந்தம் உதவிப்பணம் வழங்கும் குறிக்கோளுடன் 2001 ஆம் ஆண்டின் போது சிசு அருண கல்வி நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. நிதியம் தோற்றுவிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்து 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிதியத்தில் ரூபா 3,584,479 மீதி காணப்பட்ட போதிலும் குறிக்கோளின் பிரகாரம் புலமைப்பரிசில் வழங்குதல் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.12 தேசிய பாடசாலைகளின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது தேசிய பாடசாலைகளின் செயலாற்றல் சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 01. கொழும்பு நாலந்தா வித்தியாலயம்

(அ) 2016 ஆம் ஆண்டில் சமமாக ஒரு வகுப்பிற்கு 40 பேர் படியாக முதலாம் ஆண்டில் 05 வகுப்புக்களுக்கு 183 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக 17 மாணவர்களுக்கு உரிய

முறைமைக்குள் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் முறையற்ற வழிகளில் பாடசாலைக்கு சேர்த்துகொள்வதற்கான 17 சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ரங்கீராவ நிகழ்ச்சி தொடர்பாக வெளியிடப்பட்ட ஞாபகார்த்த சஞ்சிகையைப் பிரசுரிப்பதற்காக வழங்கப்பட்ட 138 விளம்பரங்களுக்கான ரூபா 869,000 தொகை உரிய நிகழ்ச்சி நடாத்தப்பட்டு 04 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வித்தியாலயத்தின் கிரிக்கற் அக்கடமிக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிலுவையாக இருந்த பணம் ரூபா 997,500 ஆக இருந்ததுடன் பெட்மின்டனுக்காக ரூபா 345,000 ஆக இருந்தது.

(ஈ) நீச்சல் தடாகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமாக 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதியும் தடாகத்தின் ஏடுகளில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 719,900 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதி காணப்பட்டது. 09 பயிற்சியாளர்கள் வெளித்தரப்பினர்களை பயிற்றுவிப்பதற்காக இந்நீச்சல் தடாகத்தை பயன்படுத்துவதுடன் சரியான வருமானம் கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றதா என்ற நியாயமான சந்தேகத்தை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

(உ) 2013 நவம்பர் 28 ஆந் திகதி 07/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.5.1 (ஈ) பந்தியின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையின் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல், மாணவர் செயற்பாடுகளின் செயலாற்றல், பாடசாலை பெற்றுக்கொண்ட வெற்றிகளை உள்ளடக்கிய செயலாற்றல் அறிக்கை என்பன மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு தேசிய பாடசாலைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை இதற்கு மேலதிகமாக 4.1.2.6 ஆம் பந்தியின் பிரகாரமும் 4.2.5.1 (iii) ஆம் பந்தியின் பிரகாரமும் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 08 ஆண்டுகள் சேவைக் காலத்தை மிகைத்து ஆசிரியர் இடமாற்றங்களை பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் எண்ணிக்கை 95 ஆக இருந்ததுடன் அது மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கையில் 51 சதவீதமாகும் இதற்கு மேலதிகமாக 12 ஆசிரியர்கள் பற்றாக்குறையும் 26 ஆசிரியர்கள் மிகையும் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக நாளாந்தம் 29 ஆசிரியர்கள் விடுமுறை பெற்றிருந்தார்கள்.

(எ) சில ஆசிரியர்களுக்கு நேர அட்டவணை வழங்கப்படாதிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் குறைந்த அளவு எண்ணிக்கையான கால நேரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 40 நிமிடங்கள் கொண்ட 12 காலவேளைகள் வாராந்தம் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய உதவி அதிபர்களுக்கு ஒரு பாடவேளையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**02. வென்னப்புவ ஜோசப் வாஸ் வித்தியாலயம்**

(அ) பாடசாலையின் அதிபர் பதவியானது 2010 ஒக்தோபர் 19 ஆம் திகதியிலிருந்து 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையும் பதிற்கடமை பார்க்கும் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் பதிற்கடமை பார்க்கும் அதிபருக்கு 2012 ஆகஸ்ட் 08 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் அதிபர் வேசையின் 2.II அதிவிசேட தரத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்காக முதலாம் தரத்திலுள்ள ஐந்து வகுப்புகளில் 200 மாணவர்கள் இருக்க வேண்டிய போதிலும் 188 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இடாப்பில் 149 மாணவர்களே இருந்த போதிலும் எஞ்சியுள்ள 12 வெற்றிடங்களுக்காக மாணவர்களைச் சேர்ததுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாடசாலையின் 63 ஆசிரியர்கள் 08 ஆண்டுகளுக்கும் 34 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் இடமாற்றம் பெற்றுக் கொள்ளதிருந்ததுடன் 35 ஆசிரியர்கள் பற்றாக்குறைகளும் 30 ஆசிரியர் மிகைகளும் காணப்பட்டன.

(ஈ) 2014 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,248,897 தொகையான வசதிக் கட்டணங்களும் நிலுவையாகக் காணப்பட்டன.

(உ) பாடசாலைக்கு முதலாந்தரத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது ரோமன் கத்தோலிக்க மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களில் 20 சதவீதமானவை பௌத்த மற்றும் ஏணைய சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகளாக இருந்த போதிலும் 5 சதவீதம் அளவானவை மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2 இலிருந்து 11 சதவீதம் வரையான தரங்களில் பௌத்தமானவர்களின் அளவு படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டதுடன் அது 6 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை காணப்பட்டது. அதற்கிணங்க இடைத் தரங்களுக்காக மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போக்கு காணப்பட்டதாகவும் அவ்வாறு இடம்பெறுதலானது முதலாம் ஆண்டிற்காக வேண்டிக் கொண்ட மாணவர்களுக்குச் செய்யப்படுகின்ற அநீதி என்பதுவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3. ஹொரண சிறீபாலி வித்தியாலயம்**

---

(அ) 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்துடனான 54 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றிருக்காததுடன் அது மொத்த ஆசிரியர் குழாமில் 31 சதவீதமாகும். இதற்கு மேலதிகமாக 20 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் ஒரு ஆசிரியரின் மிகையும் காணப்பட்டது.

(ஆ) பாடசாலை அபிவிருத்தி நிதியமாகிய ரூபா 5.3 மில்லியனுக்கு அண்மித்த பணம் வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டதுடன் 07/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பிரிவின் பிரகாரம் குறுங்கால முதலீடு ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 யூன் 20 ஆந் திகதிய 2006/27 ஆம் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் புலைமைப்பரிசில் பெறுபவர்களின் புலைமைப்பரிசில வவுச்சர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**04. ஹாலி எல மகாவித்தியாலயம்**

---

(அ) பாடசாலை மாணவர்களின் கல்விச் செயலாற்றலானது பரீட்சை பெறுபேறுகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அரசாங்கத்தின் அனைத்து பரீட்சை பெறுபேறுகளும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதற்கிணங்க பாடசாலையின் பிரதான குறிக்கோளாகிய மாணவர்கள் கல்வியில் பூரணமடைதல் வெற்றிகரமாக

நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 5ஆம் ஆண்டு புலைமைப்பரிசில் | 2014 ஆம் ஆண்டின் போது சித்தியடைதல் சதவீதம் 29.3 சதவீதமாக இருந்ததுடன் அது 2016 ஆம் ஆண்டின் போது 8 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. |
| க.பொ.த (சா.தரம்) | 2013 ஆம் ஆண்டில் கணித பாடத்தில் சித்தியடைதல் 55 சதவீதமாக இருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டில் 47 சதவீதமாக இருந்தது. |
| க.பொ.த (உயர்தரம்) | பல்கலைக்கழகத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது ஒரு மாணவன் தகமை பெற்றிருந்ததுடன் 2014 ஆண்டின் போது பௌதீக விஞ்ஞானத்தில் ஒரு “C” சித்தியும் 2015 ஆம் ஆண்டில் விவசாய விஞ்ஞானத்திற்கு ஒரு “C” சித்தியும் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

(ஆ) இடமாற்றம் பெற்றுக் கொள்ளாமல் 08 ஆண்டுகளிலிருந்து 24 ஆண்டுகள் வரையான சேவைக்காலம் பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 15ஆக இருந்தது. பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை 20 ஆகவும் மிகைகளின் எண்ணிக்கை 07 ஆகவும் இனங்காணப்பட்டிருந்தது.

(இ) பாடசாலையின் கொள்வனவு நடவடிக்கையின் போது கொள்வனவு அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. பண்டாரவளை மத்திய மஹா வித்தியாலயம்

(அ) மொத்த ஆசிரியர் குழாமில் 32 சதவீதமான 60 ஆசிரியர்கள் 08ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது இப்பாடசாலையில் சேவையாற்றி வருகிறார்கள். பாடசாலையில் 18 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் 27 ஆசிரியர்களுக்கான மிகையும் காணப்பட்டது.

(ஆ) முதலாம் தரத்திலிருந்து ஐந்தாம் தரம் வரை சமாந்தரமான 4 வகுப்புக்கள் வீதம் இருந்ததுடன் 6ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை சமாந்தரமான 8 வகுப்புக்கள் வீதம் காணப்பட்டது. இந்த அனைத்து வகுப்புக்களிலும் இருக்க வேண்டிய உச்ச அளவு மாணவர்களின் எண்ணிக்கை 2,960ஆக இருந்தும் அந்த எல்லையை மிகைத்து 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணான வகையில் 121 மாணவர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பாடசாலையிலுள்ள நூல்நிலையத்தில் காணாமல் போன 3,615 நூல் நிலையப் புத்தகங்களை பயன்பாட்டு பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு 2013 யூலை 04ஆந் திகதி மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வேண்டுதல் விடுவிக்கப்பட்டிருந்தும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டு தொடர்பாக 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை மிகையாக கட்டளையிடப்பட்டிருந்த 4,056 பாடப்புத்தகங்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. பாடப்புத்தக இருப்பு பதிவேடு தயாரிக்கப்படவோ அல்லது நாளது வரையாக்கப்பட்டிருக்கவோ இல்லை.

(உ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 6,097,500 மொத்த தொகையான பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவ பணமும் நிலுவையாகவுள்ள வசதிக் கட்டணம் ரூபா 152,100 தொகையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதிய 35/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க பாடசாலையின் உணவகங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 06. ருவன்வெல்ல இராஜசிங்ஹ மத்திய மஹா வித்தியாலயம்

(அ) ருவன்வெல்ல இராஜசிங்ஹ மத்திய மஹா வித்தியாலயத்தில் அதிபரினால் 2015 சனவரி 29 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் 2014 ஆம் ஆண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 06 ஆம் ஆண்டு மாணவர்கள் 51 பேரிடமிருந்து ஒரு மாணவனிடமிருந்து ரூபா 5,000 வீதம் ரூபா 255,000 மொத்த பணம் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் பாடசாலை அபிவிருத்தி நிதியக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் 2016 ஆம் ஆண்டின் போது 08 மாணவர்கள் இடைத்தர வகுப்புக்களுக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) பாடசாலையில் 08 இலிருந்து 32 ஆண்டுகள் வரையான காலம் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது 27ஆசிரியர்கள் இருந்ததுடன் அது மொத்த ஆசிரியர் குழாமில் 24 சதவீதமாகும்.

(ஈ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12ஆவது பிரிவின் பிரகாரம் சாதாரண பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு 35 பாடவேளைகளும் வகுப்பிற்கு பொறுப்பாகச் செயற்படுகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு 33 பாட வேளைகளும் உயர்தர வகுப்பில் பிரதான பாடங்களைக் கற்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு 30 பாடவேளைகளும் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான வகையில் 2016 ஆம் ஆண்டிற்காக நேர அட்டவணைகள் வழங்கப்படும் போது 38 ஆசிரியர்களுக்கு மிகவும் குறைந்த பாடவேளைகளே வழங்கப்பட்டிருந்தன.

## 07. களுத்துறை திஸ்ஸ மத்திய மகா வித்தியாலயம்

---

(அ) கூரை இத்துப் போனதன் காரணமாக கைவிடப்பட்ட பழைய கட்டிடத்தை திருத்தம் செய்யாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வித்தியாலயத்திற்குச் சொந்தமான அனைத்து வசதிகளுடனான ஒரு உள்ளக விளையாட்டரங்கு காணப்பட்ட போதிலும் அது முறையாகப் பராமரிக்கப்படாது கைவிடப்பட்டதன் காரணமாக அது குறைந்த பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பாடசாலையில் பாடத்திற்கு புறம்பான, பாடத்திற்கு சமமான மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் அரைகுறையாகக் காணப்பட்டதுடன் பெட்மின்டன், டேபிள் டெனிஸ் ஆகிய விளையாட்டுக்கள் பாடசாலை முறைமையில் நீக்கப்பட்டுள்ளமையும் மாணவர்களுக்கு குழுக்கள் இழக்கப்பட்டுள்ளமையும் ஊடகப்பிரிவு செயற்படாது காணப்பட்டமையும் எச்சங்கமும் செயற்படும் நிலையில் காணப்படவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்துடன் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களின் எண்ணிக்கை 60 ஆக இருந்ததுடன் அது மொத்த ஆசிரியர் குழாமில் 57 சதவீதமாகும்.

(உ) இலங்கை அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களை பதவியில் அமர்த்துதலின் கீழ் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த இரண்டு பிரதி அதிபர்களும் இடமாற்றம் செய்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த பிரதி அதிபர் ஒருவரும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

(ஊ) ஆய்வுகூட வசதிகள் போதிய அளவில் இல்லாதிருந்ததுடன் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

- கூரை இத்துப்போய் நீர் கசிதல், விவசாய மற்றும் மனையியல் விஞ்ஞான உபகரணங்களுக்காக ஆய்வுகூட வசதிகள் போதியளவில் இல்லாமை, பௌதீக மற்றும் இரசாயன ஆய்வுகூடத்தின் உட்பகுதி துண்டு துண்டாக வெடித்து கீழ் இறங்கி இருத்தல்.

- 6ஆண்டுகள் காலமாக காலாவதியான இரசாயனப் பொருட்களை நீக்குவதற்கு முறையான வேலைத்திட்டத்தை ஈடுபடுத்தாமை மற்றும் தேவைப்படுகின்ற உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும் போதியளவில் கிடைக்காமை.

**08. ஹுங்கம விஜயபா தேசிய பாடசாலை**

---------------------------------------------------------------

ஹுங்கம விஜயபா தேசிய பாடசாலையின் ஆரம்ப பிரிவிலுள்ள உதவி அதிபரினால் 2016 ஆம் ஆண்டிற்கான சீருடை வவுச்சர்களை பகிர்ந்தளிக்கும் போது சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆரம்ப பிரிவு சம்பந்தமாக அதிகளவன மனுக்களும் முறைப்பாடுகளும் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் இருபது ஆண்டு காலமாக இடமாற்றம் கிடைக்காது ஒரே இடத்தில் இருக்கின்றமை போன்ற சிக்கலான நிலைமைகள் உருவாகுவதற்கு காரணமாக உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**09. கண்டி கிங்ஸ்வுட் வித்தியாலயம்**

---------------------------------------------------

(அ) இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன் அது மொத்த ஆசிரியர் குழாமில் 18 சதவீதமாகும். இதற்கு மேலதிகமாக ஐந்து ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் 24 ஆசிரியர்களின் மிகையும் காணப்பட்டன.

(ஆ) 2016 சனவரி 07ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுவான பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு 35 காலவேளைகளும் வகுப்பிற்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு 33 காலவேளைகளும், உயர்தர வகுப்பில் பிரதான பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு 30 காலவேளைகளும் வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் இதைவிட மிகவும் குறைந்த காலவேளைகளே வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 05 ஆசிரியர்களுக்கு நேரஅட்டவணை வழங்கப்படாதிருந்ததுடன் அவர்களால் பெற்றுக் கொள்ளும் சம்பளத்திற்கு சமமாக கடமைகளை நிறைவேற்றியமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் உதவி அதிபருக்கு 40 நிமிடங்களான 12 காலவேளைகளேனும் கற்பிப்பதற்காக வழங்கப்படவேண்டிய போதிலும் அவர்களுக்கு கற்பிப்பதற்காக ஒரு கால வேளையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 10 ஆண்டுகளிலிருந்து 23 ஆண்டுகள் வரையான காலமாக பாடசாலையில் சேவையாற்றி வரும் 08 கல்விசார் பதவியணியினருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 நவம்பர் 02 ஆந் திகதியிலிருந்து 2016 செப்தெம்பர் 30ஆந் திகதி வரை பிரதான நூல் நிலையத்திலிருந்து 22 ஆசிரியர்களும் 04 கல்விசாரா பதவியணியினரும் பெற்றுக் கொண்டு மீளஒப்படைக்காத புத்தகங்களின் எண்ணிக்கை 54 ஆகும். ஓய்வுபெற்றுச் சென்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வெளிநாட்டிற்குச் சென்ற 44 உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட 146 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் இவற்றில் 25 புத்தகங்கள் ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரால் பெற்றுக் கொண்ட புத்தகங்களாகும்.அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பணப் பெறுமதியை அறவீடு செய்வதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதான நூல்நிலையத்திலுள்ள 1,130 புத்தகங்களும் ஆரம்ப நூல் நிலையத்திலுள்ள 53 புத்தகங்களும் அழிக்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும் அழிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**10. பன்னிபிடிய தர்மபால வித்தியாலயம்**

பாடசாலையில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஒரு ஆசிரியருக்கு 2016 ஆம் ஆண்டின் போது ஒரு வாரத்திற்கு 18 காலவேளைகளும் 2017 ஆம் ஆண்டின் போது 14 கால வேளைகளும் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் உயர்தர வகுப்பில் பொருளியல் விஞ்ஞானத்தை கற்பிக்கும் ஒரு ஆசிரியருக்கு 2016 ஆம் ஆண்டில் ஒரு வாரத்திற்கு 30 காலவேளைகள் வழங்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது ஒரு கால வேளையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**11. அம்பலன்கொட தர்மசோக வித்தியாலயம்**

அம்பலன்கொட தர்மசோக வித்தியாலயத்திலுள்ள மாணவர்களுக்காக மேடையேற்றப்பட்டிருந்த மேடை நாடகம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது 03 மேடை நாடகங்களும் 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திகதி வரை 03 மேடை நாடகங்களுமாக 06 மேடை நாடகங்கள் பாடசாலையின் கலையரங்கில் மேடையேற்றப்பட்டு வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு நாடகத்தைப் பார்வையிடுவதற்காக ஒரு மாணவனிடமிருந்து ரூபா 200 ஆன ஆகக் குறைந்த கட்டணத்திலிருந்து ரூபா 500 மற்றும் ரூபா 1000 ஆகிய பெறுமதிகளைக் கொண்ட டிக்கட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. மாணவர்களின் கலை ரசனைகளை மேம்படுத்துவதற்காக இந்நாடகக் கண்காட்சிகளை பாடசாலை மாணவர்களுக்கு பர்வையிடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அனுமதிச் சீட்டுக்களுக்காக அதிக விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் மேடையேற்றப்பட்ட 03 நாடகங்களில் ஒரு நாடகத்திற்காக மாத்திரம் கல்வி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள 02 நாடகங்களுக்காக 2015 சனவரி 29 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க எதுவித அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கல்வி அமைச்சு செயலாளரின் 2013 நவம்பர் 28ஆந் திகதிய 07/2013ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிகளைச் சேகரிக்கும் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் முறையாக தொடர்

இலக்கத்துடன் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்களிலும் வலயக் கல்விப் பணிப்பாளரின் உத்தியோக முத்திரை பொறிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பெயரில் அனுமதிச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருக்காததுடன் அச்சிடப்பட்ட அனுமதிச்சீட்டுக்களிலும் வலயக் கல்விப் பணிப்பாளரின் உத்தியோக முத்திரைக்குப் பதிலாக அதிபரின் உத்தியோக முத்திரையைப் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) பாடசாலைகளால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்திட்டங்களின் வருமானங்களைப் பெற்றுக் கொள்ளுதலும் செலவு செய்தலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கின் மூலம் இடம்பெறவேண்டுமென 07/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இந்த நாடகக் கண்காட்சிகளின் போது வருமானத்தை சேகரித்தல் மற்றும் செலவு செய்தலானது பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கின் மூலம் இடம்பெற்றிருக்காததுடன் 02 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் பாடசாலையுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட ஏனைய அமைப்புக்களிடம் இன்னும் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. ஏனைய 04 நாடக கண்காட்சி சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் பாடசாலையுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட ஏனைய அமைப்புக்களிடம் தற்பொழுதும் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) இந்த 06 நாடகக் கண்காட்சிகளில் 02 கண்காட்சிகள் மாத்திரம் பாடசாலைகளின் மூலமும் எஞ்சியுள்ள 04 நாடகங்களும் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அமைப்புக்கள் மற்றும் பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 2015 சனவரி 29ஆந் திகதிய கல்வி அமைச்சு செயலாளரின் 05/2015ஆம் இலக்க சுற்றிக்கையின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஒரு மாதத்திற்கு ஒரு மிகச் சிறப்பான மேடை நாடகம் ‘‘தம்சோவேதீ ரங்க தெக்வீம’’ என்ற தலைப்பில் கல்வி அமைச்சு செயலாளருக்கு பதிலாக தேசிய பாடசாலைகள் பணிப்பாளரால் வழங்கப்பட்ட 2017 மார்ச் 22 ஆந் திகதிய ED/1/6/1/Projects/2017 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 04,06,07 மற்றும் 08 ஆகிய விடயங்களில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 07/2013 மற்றும் 05/2015ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் மூலம் பாடசாலைகளில் முறையற்ற வகையில் பணம் சேகரித்தலை தடை செய்வதற்காக கல்வி அமைச்சு செயலாளரால் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. அதிபர்கள் சில சந்தர்ப்பங்களில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் நிதிப்பிரமாணங்களை சரியாக பின்பற்றாமையால் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேலே குறிப்பிட்ட முறையில் கடிதங்களின் மூலம் பணத்தை அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக முறையற்ற வகையிலும் வெளிப்படைத் தன்மை இன்றியும் நடவடிக்கை எடுப்பதற்கு பாடசாலைகளுக்கு சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 12. மாத்தறை சுஜாதா பாலிகா வித்தியாலயம்

தெரிவுப்பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் முதலாவது ஆண்டிற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது 2017/2016ஆம் இலக்க சுற்றிக்கையின் 11.1(அ) பிரிவிற்கு முரணாக எதுவித அறிவித்தலுமின்றி தற்காலிக வரவு இடாப்பிலுள்ள இரண்டு மாணவர்களின் பெயர்கள் வரவு இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாடசாலைக்கான தூரத்தை நிர்ணயிக்கும் போதும் அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்கு புள்ளிகள் குறைக்கும் போதும் ஒன்றித்த கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மேன்முறையீட்டுச் சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தகமைகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குச் சமமாக மேலும் மாணவர்களுக்கு அநீதி அல்லது நியாயமின்மை இடம்பெறுவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது.

(இ) தொடக்க நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட்டிருந்த கொள்ளைகளுக்கு முரணாக புள்ளிகள் மேன்முறையீட்டின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக தொடக்க நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளித்த மாணவர்களுக்கு அநீதி அல்லது நியாயமின்மை இடம்பெறுவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது.

(ஈ) அவ்வாறு அநீதி அல்லது நியாயமின்மைக்கு உள்ளாகிய மாணவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**13. அதிபர் வெற்றிடம்**

**-----------------------------**

2017 மே மாதம் இறுதி வரையும் 352 தேசிய பாடசாலைகளில் 228 பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக பதிற்கடமை அல்லது கடமைகளை மேற்கொள்ளல் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**14. இலங்கை அதிபர் சேவை**

**------------------------------------------**

தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஒக்தோபர் 22 ஆந் திகதிய 1885/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 12,160 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 16,512 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 13,517 ஆக இருந்ததனால் மேலும் 1,357 உத்தியோகத்தர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டி இருந்தார்கள்.

(ஆ) மீளாய்வாண்டின் போது 352 அதிபர்கள் ஓய்வு பெற்றிருந்ததுடன் அவர்களின் 42 கோவைகள் மீது மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 22 உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறுதல் கடிதங்கள் 18 நாட்களிலிருந்து 9 மாதங்கள் வரையான காலம் தாமதித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறுதல் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் இடம்பெறாமையின் அளவு 52 சதவீதமாக இருந்தது.

(ii) ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களால் ஓய்வு பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடிதமானது வலய மற்றும் மாகாண கல்வி அலுவலகத்தின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு ஓய்வு பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அதிபர் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் ஓய்வு பெறுதல் கடிதம் பல நாட்கள் தாமதித்து வழங்கப்பட்டிருந்தன. தாமதத்திற்கு தாக்கமளித்த விசேட காரணங்கள் எதுவும் இருக்கின்றமை கோவைகளைப் பரீட்சித்த போது அவதானிக்கப்படவில்லை.

(iii) 1999 ஆகஸ்ட் 18 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து நீக்கப்பட்ட கேகாலை ஆரம்பப் பாடசாலையில் பதிற் கடமையாற்றிய ஒரு அதிபர் அது தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான குழுவிற்கு முறைப்பாடு செய்திருந்தார். அது சம்பந்தமாக 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அமைச்சரிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டிருந்தது. அத்தகவல்கள் அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் எதுவும் கோவைகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்படவில்லை.

(iv) பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் முறைப்பாடுகள் சம்பந்தமாக 2016 சனவரி 06 ஆந் திகதி வேண்டிக் கொள்ளப்பட்ட தகவல்கள் அதிபர்கள் கிளையினால் 2017 பெப்ரவரி இறுதிவரை அனுப்பிவைக்கப்படாமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(v) இலங்கை அதிபர் சேவை 2-1 தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வு பெறுவதற்கான கோவை அதிபர் கிளைக்கு கிடைத்து 1 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் வலய கல்விப் பணிப்பாளரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டிருக்காமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாகும்.

15. 2016 திசெம்பர் 31 ஆந் திகதிவரை 53 தேசிய பாடசாலைகளின் உடன்படிக்கைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்த உணவகங்களின் நிலுவை வருமானம் ரூபா 5,269,609 ஆகும்.

16. தமது பாடசாலைகளில் அல்லது அருகாமையிலுள்ள பாடசாலைகளில் போதியளவு கேட்போர் கூட அல்லது மண்டப வசதிகள் இருந்தும் 20 தேசிய பாடசாலைகளில் பல்வேறு விழாக்களுக்காக தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான கேட்போர் கூட அல்லது மண்டப வசதிகளைப் பெற்றுக் கொண்டமைக்காக 2016 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்ட மொத்தப்பணம் ரூபா 7,279,029 ஆகும்.

17. 25 தேசிய பாடசாலைகளின் 346 ஆசிரியர்களுக்கு இரவல் வழங்கிய புத்தகங்களை மீள வழங்குதல் தாமதித்த சந்தர்ப்பங்கள் 521 ஆக இருந்த போதிலும் தாமதக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

18. 35 தேசிய பாடசாலைகளின் 243 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லல், வெளிநாடு செல்லல், ஓய்வு பெறுதல், சேவையிலிருந்து நீங்குதல் ஆகிய சந்தர்ப்பங்களில் மீண்டும் ஒப்படைக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 605 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 522,181.12 ஆகும். அப்புத்தகங்களை அல்லது அவற்றின் பெறுமதியை மீளப்பெற்றுக்கொள்ளாது அந்த ஆசிரியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

19. 2016 திசெம்பர் 31 வரை 52 தேசிய பாடசாலைகளில் பாடசாலை அபிவிருந்திச் சங்கங்களிடமிருந்து அல்லது விடுதி நிதிகளிலிருந்து அல்லது வசதிக் கட்டண மற்றும் சேவைக்கட்டண கணக்குகளிலிருந்து அல்லது விளையாட்டு நிதியங்களிலிருந்து சம்பளம் செலுத்தி சேர்த்துக்கொள்ளப்பட்ட கல்விசாரா பதவியணியினரின் எண்ணிக்கை 307 ஆகும். அவர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் போது மாத்திரம் செலுத்தப்பட்ட மொத்த சம்பளமும் படிகளும் ரூபா 5,781,742 ஆக இருந்ததுடன் அது முழுமையாக மாணவர்கள் மீது சுமத்தப்பட்ட செலவுகளாகும்.

20. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 65 தேசிய பாடசாலைகளில் 360 கல்விசாரா பதவியணியினர்களின் மிகைகளும் 147 தேசிய பாடசாலைகளில் 1440 கல்விசாரா பதவியணியினர்களின் பற்றாக்குறையும் காணப்பட்டன.

21. 2016 ஆம் ஆண்டின் போது தர உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்காக 105 தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20,808,668 தெகையில் ரூபா 10,556,724 தொகையானது 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எஞ்சியிருந்ததுடன் அப்பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்டன.

22. 36 தேசிய பாடசாலைகளால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 7,402,694 தொகையான குறித்த தேவைக்கான உப கட்டுநிதிகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

23. 2016 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்காய்விற்குத் தேவையான தகவல்களைக் கோரி 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு 125 தேசிய பாடசாலைகளிலிருந்து 2017 யூன் 20 ஆந் திகதி வரை பதில்கள் வழங்கப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்விற்காக தகவல்களைக் கோரி 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களுக்கும் 71 தேசிய பாடசாலைகளிலிருந்து பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவற்றிற்கு மத்தியில் இரண்டு ஆண்டுகளுக்குமாக பதில்கள் அனுப்பிவைக்கப்படாத பாடசாலைகள் 47 ஆக இருந்தன.

## 3.13 தேசிய கல்விக் கல்லூரிகளின் செயலாற்றல்

மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) நில்வளா தேசிய கல்விக் கல்லூரி

(i) நில்வளா தேசிய கல்விக் கல்லூாயீல் இலங்கை ஆசிரியர் கல்விச் சேவையைச் சார்ந்த 13 பதவிகளில் 45 வெற்றிடங்களும் கல்வி சாரா பதவியணியினர்களின் 16 பதவிகளில் 30 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் கல்வி சாரா பதவியணியினர்களின் 05 பதவிகளுக்குரிய மிகைப் பதவியணியினர்கள் 06 ஆகும். 09 விரிவுரையாளர்கள் 14 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக இக்கல்விக் கல்லூாயில் சேவையாற்றி வருகின்றார்கள்.

(ii) நில்வளா தேசிய கல்விக் கல்லூரிக்குச் சொந்தமான 0.06310 ஹெக்டயர் அளவான 04 காணித்துண்டுகளில் 03 வெளித்தரப்பினர்கள் அத்துமீறி வசித்து வருகின்றார்கள்.

### (ஆ) ஊவா தேசிய கல்விக் கல்லூரி – பண்டாரவளை

(i) 2014 யூன் 24 ஆந் திகதி இந்திய உதவியின் கீழ் கல்விக் கல்லூரிக்கு கிடைத்த 31 கணனிகளுடனான சகல வசதிகளையும் கொண்ட மொழி ஆய்வுகூடம் மீளாய்வாண்டின் இறுதி வரை இரண்டு ஆண்டு காலம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருந்தது.

(ii) 2015 சனவரி 05 ஆந் திகதி கல்விக் கல்லூரிக்கு கிடைத்த நான்கு சக்கர உழவு இயந்திரமானது கணக்காய்வுத் திகதி வரை பதிவு செய்யப்படவோ அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவோ நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 27 ஏக்கர் அளவான காணி கல்விக் கல்லூரிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் அக்காணியில் 2/3 அளவானவை விளைதிறனாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. இரண்டு உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

(iii) 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,291,651 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பேராதெனிய தேசிய கல்விக் கல்லூரி**

(i) கல்விக் கல்லூரிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 151 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 61 ஆக இருந்ததனால் அது மொத்த அங்கீகரித்த பதவியணியினரில் 40 சதவீதமளவில் காணப்பட்டது. தமிழ் மொழியில் நிரந்தர விரிவுரையாளர் எவரும் இல்லாததனால் இரண்டு வெளிவாரி விரிவுரையாளர்கள் அப்பாடங்களைக் கற்பிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஆசிரியர் கல்விச் சேவையில் பதவியுயர்வுகளுக்கான நடைமுறைகள் உரிய முறையில் தாமதமின்றி அமுல்படுத்தப்படாமை, தொழில்சார் இயலளவு அபிவிருத்திக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் போதியளவில் வழங்கப்படாமை, போதியளவான கணனி மற்றும் இணையதள வசதிகள் இல்லாமை, தொலைபேசி படிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு மீளாய்வாண்டின் இறதிவரையும் நடவடிக்கை எடுக்காமை ஆகிய விடயங்களின் காரணமாக உத்தியோகத்தர்கள் சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) கல்விக் கல்லூரிக்குச் சொந்தமான 03 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணியில் 2001 மே மாதத்திலிருந்து அத்துமீறிய குடியிருப்பாளர்கள் வசித்து வந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அவர்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் 2011 நவம்பர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட கேட்போர் கூடத்தையும் அதனோடு இணைந்த வகுப்பறைகளையும் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) ரூபா 3,897,350 ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்படைக்கப்பட்ட வீதி முறைமைகளைத் திருத்தம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் நடவடிக்கைகளும் பல செயற்திட்டங்களும் உரிய நியமத்தின் படி இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் அவை தொடர்பாக உரிய மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(vi) கல்விக் கல்லூாயில் காணப்பட்ட 9 உத்தியோகபூர்வ இல்லங்களில் 08 இல்லங்கள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டன. H-01 உத்தியோகபூர்வ இல்லமானது உடைந்து விழக்கூடிய நிலையில் காணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் H-10 உத்தியோகபூர்வ இல்லத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து வெளித்தரப்பினர் ஒருவர் அனுமதியின்றி வசித்து வந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(vii) கல்விக் கல்லூரிக்குச் சொந்தமான உயர்தர நூல் நிலையம் ஒன்று காணப்பட்டதுடன் நாளாந்தம் 200 இற்கு அண்மித்த அளவான மாணவர்கள் அதனைப் பயன்படுத்திவருகின்றமை அவதானிக்கப்பட்டது. புவியியல் விசேட பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நூலகராக பணியாற்றி வருவதுடன் நூலக பதவியணியினர் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) நூல் நிலையத்திலுள்ள பழைய கணனி பதிவேட்டில் பதியப்பட்டு ஏடுகளில் பெயருக்கு முன்னால் சிகப்பு பேனையால் வெட்டப்பட்டிருந்த போதிலும் எக்காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதற்கு முன்னர் நூல் நிலையத்திற்குப் பொறுப்பாக இருந்த மூன்று உத்தியோகத்தர்கள் நூல் நிலையத்தின் சொத்துக்களை முறையாக ஒப்படைப்பதற்கும் பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுக்காததுடன் ஏடுகள் காணாமல் போயிருந்ததன் காரணமாக அவர்களில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. யாருடைய தவறின் காரணமாக ஏடுகள் காணாமல் போயிருந்தது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் அந்த அறவீட்டு நடைமுறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது.

### 3.14 பிரிவெனாக்களின் செயலாற்றல்

தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1980 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 108/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரிவெனாக்களுக்காக வழங்கப்பட்ட பணிப்புரைக் கோவைகளைப் பரிசோதனை செய்த போது அப்பணிப்புரைக் கோவைகளிலுள்ள பணிப்புரைகளுக்கு முரணான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பிரிவெனாக்களின் முகாமைத்துவ செயற்பாடுகள்**

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 754 பிரிவெனாக்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் வதிவிட மதகுருக்களின் மொத்த மாணவர் எண்ணிக்கை 66,003 எனக் கணக்காய்விற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. வதிவிட மதகுருக்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை 6,503 ஆக இருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத ஆசிரியர்களின் எண்ணிக்கை 306 ஆகும். 1980 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 108/6 ஆம் இலக்க பணிப்புரைக் கோவையின் 16.3 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்தம் வருகை தரும் மாணவர்களின் சராசரிப் எண்ணிக்கையை செம்மையாக்குகையில் அத்திகதியில் ஆசிரியர் மிகை அண்ணளவாக 1,700 அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறு ஆசிரியர் மிகையாகக் காணப்பட்ட போதிலும் 2017 பெப்ரவரி 14 ஆந் திகதி மீண்டும் 199 ஆசிரியர்களுக்கு (மதகுரு ஆசிரியர்கள் 122 மற்றும் வதிவிட ஆசிரியர்கள் 77 ஆக) நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் சிக்கலைக் கொண்டிருந்தது.

(ii) பிரிவெனாக்களுக்காக ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது நாயக்க மதகுருவினால் அவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு பிரிவெனாக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பாக பிரிவெனாக் கல்விச் சபை அங்கீகரித்ததன் பின்னர் நியமனம் வழங்கப்படுதல் இடம்பெற்றிருந்தும் கல்விச் சான்றிதழ்களின் சரியான தன்மை கல்வி அமைச்சின் மூலம் அல்லது பிரிவெனா கிளையின் மூலம் பரீட்சிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) 1979 இன் 64 ஆம் இலக்க பிரிவெனாக்கள் கல்வி அதிகாரச் சட்டத்தின் 26, 27 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் கல்வி அமைச்சர் மற்றும் பிரிவெனாக்கள் கல்விச் சபையின் இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்ட 1980 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 108/6 ஆம் இலக்க பணிப்புரைக் கோவையின் 16(03) ஆம் பிரிவின் பிரகாரம் பிரிவெனா ஆசிரியர்களை அமர்த்திக் கொள்ளுதலானது மாணவர்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுதல் வேண்டும். அதற்கிணங்க பிரிவெனாக்களின் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதுடன் கல்வியின் தரத்தை பேணுவதற்கும் பிரிவெனா நிறுவனங்களின் தன்மைக்கேற்ப சமமான பாடங்களின் பிரகாரம் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறைமையைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பிரிவெனாக் கல்வி முறைமையின் நிகழ்காலப் பலவீனங்களுக்கும் பிரிவெனா கல்வி வீழ்ச்சியடைவதற்கும் தாக்கமளித்த காரணங்களாக அவதானிக்கப்பட்ட பல விடயங்கள் வரைவு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை கணக்குகள் கிளையின் தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உதவிப் பணத்தைச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆனால் வருடாந்த உதவிப் பணத்தைச் செலுத்தாத பிரிவெனாக்களின் எண்ணிக்கை 60 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வருடாந்த உதவிப் பணம் ரூபா 18,243,465 ஆகும்.

(உ) பிரிவெனாக் கிளையின் 18 உதவிப் பணிப்பாளர் மதகுருக்கள் 12 ஒருங்கிணைப்பாளர் தேரர்கள் மற்றும் ஒரு நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மாத்திரம் இருப்பதனால் நாடு முழுவதும் அமைந்துள்ள 757 பிரிவெனாக்களை முறைப்படியாக பரீட்சிப்பதற்கு போதிய பதவியணியினர் இருக்கவில்லை.

கிளைப் பிரதானி, அரசாங்க முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர், ஆவண உதவியாளர், அலுவலக பணியாளர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு முறைப்படி எழுத்து மூலம் கடமைகள் ஒப்படைத்தமை தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பாட ஆலோசகர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களாக ஏனைய பிரிவெனாக்களில் கடமையாற்றி வருகின்ற 14 பிரிவெனா விரிவுரையாளர்கள் பிரிவெனா கிளைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 2012 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை பல்வேறு காலப்பகுதிகளில் கடமையாற்றியிருந்தும் சம்பளம் செலுத்துதல் உரிய பிரிவெனா மூலம் இடம்பெற்று வருகின்றமை அவதானிக்கப்பட்டது. நீண்ட காலமாக இணைத்துக்

கொள்ளப்பட்டு கடமையாற்றியதன் காரணமாக சேவை தொடர்பான நிச்சயமற்ற தன்மையும் தாம் உச்ச அளவு கடமையாற்றியமை தொடர்பாக நம்பகத்தன்மை இல்லாமையின் காரணமாக விளைத்திறனானதும் தரமிக்கதுமான சேவையை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது சிக்கலானது எனவும் உத்தியோகத்தர்கள் தமது தொழில் தொடர்பாக திருப்திகரமான நடவடிக்கைகளைக் கொண்டிருக்காமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 1979 இன் 64 ஆம் இலக்க பிரிவெனா கல்வி அதிகாரச் சட்டத்தின் 4.13 ஆம் பந்தியின் பிரகாரம் பிரிவெனா கல்விச் சபை ஆகக்குறைந்தது ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒரு தடவை ஒன்றுகூட வேண்டிய போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதற்கிணங்க ஒன்று கூடியிருக்கவில்லை.

(எ) அமைச்சின் பல்வேறு கிளைகளின் மூலம் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவெனாக்களின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஏ) பாதீடு மற்றும் திட்டமிடல்**

2017 ஆம் ஆண்டிற்காக பிரிவெனாக் கல்விக்கு கல்வி அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட முறைமை பின்வருமாறாகும்.

| விடயம் | வேண்டப்பட்ட பணம் | கிடைத்த பணம் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன |
| மூலதனச் செலவுகள் | 758.0 | 80 |
| மீண்டு வரும் செலவுகள் | 341.5 | 260 |
| 2017 பாதீட்டின் மூலம் | -- | 50 |
| | **1,099.5** | **390** |

இது சம்பந்தமான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விண்ணப்பித்த பணத்தில் 35 சதவீதம் அளவில் கிடைத்திருந்ததுடன் மூலதனச் செலவுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட பணத்தில் 10 சதவீதமான குறைந்த நிதி ஏற்பாடு மாத்திரமே கிடைத்திருந்ததன் காரணமாக பிரிவெனாக் கல்வியை மேம்படுத்துவதற்கு அது போதியதாகக் காணப்படவில்லை.

(ii) 2017 வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் பிரிவெனா ஆசிரியர்களின் இயலுமையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 50 மில்லியன் கிடைத்திருந்தும் அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முறையான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மூலதன மற்றும் மீண்டு வரும் நிதி ஏற்பாடுகளை செலவு செய்வதற்காக முறையான வேலைத்திட்டம் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிரிவெனாக்களுக்காக பல்வேறு புத்தகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 சனவரி 13 ஆந் திகதி பிரிவெனாக் கிளையின் களஞ்சிய அறையைப் பரீட்சித்த போது ரூபா 4,090,624 பெறுமதியான 166 பல்வேறு எழுத்தாளர்கள் தொடர்பான புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) பிரிவெனாக் கல்விக்காக இனங்காணப்பட்ட புத்தகங்களைத் தவிர ஏனைய புத்தகங்களுக்காக புத்தக பிரசுரிப்பு ஆலோசனைச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பல புத்தகங்களுக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கிழக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு தொடக்க பிரிவெனாவும் வவுனியா மாவட்டத்தில் வித்தியாதன பிரிவெனாவையும் தவிர வட மாகாணத்தில் பிரிவெனா ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.15 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது தர உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக 40 தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,748,592 தொகையில் ரூபா 1,475,910 தொகையானது உரிய தர உள்ளீட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததனால் 2015 திசெம்பர் 31 வரை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் நடைமுறைக் கணக்குகளில் எஞ்சியிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 43 தேசிய பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு சொந்தமான ரூபா 633,803,600 கூட்டுமொத்தமான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.16 அமைச்சின் முகாமைத்துவ நடவடிக்கைகள்

அமைச்சினால் போதியளவில் முகாமைத்துவ தீர்மானங்களை எடுக்காமையின் காரணமாக பின்வரும் பலவீனங்கள் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 09 மாகாணங்களில் விசேட தேவையுள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வளங்கள் மற்றும் தகவல் நிலையத்தை தோற்றுவிப்பதற்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

**(ஆ) பாடசாலைகளுக்கு இணைய தள வசதிகளை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) டயலொக் கம்பனி மற்றும் இலங்கை டெலிகொம் கம்பனியினால் 2005 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை கணனி வலையமைப்பு சம்பந்தமாக வழங்கப்பட்டிருந்த இணையதள வசதிகளின் எண்ணிக்கை 1,724 ஆகும். 2016 ஆம் ஆண்டின் போது அந்த இணையதள வசதிகளை கைவிடுவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்தது.

(ii) 2016 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2017 பெப்ரவரி வரை இந்த இரண்டு கம்பனிகளுக்கும் எதுவித பணமும் செலுத்தப்படாதிருந்ததுடன் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் ரூபா 91,221,972 ஆகும். 2016 ஆம் ஆண்டின் போது 123 டயலொக் இணைப்புக்களும் 910 தொலைத்தொடர்பு இணைப்புகளும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் எப்பாடசாலைக்கும் 2017 யூன் இறுதி வரை புதிய இணையதள வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. டயலொக் கம்பனியினால் 192 பாடசாலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த இணைப்புக்களை ரூபா 1,500 மாதாந்தக் கட்டணத்தின் கீழான புதிய இணைப்புக்கள் என மாற்றம் செய்யும் நடவடிக்கை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக இலங்கை டெலிக்கொம் கம்பனிக்கு 2016 யூலை 01 ஆந் திகதிக்குப் பின்னர் வெப் பில்டரிங் சேவையை வழங்குவதற்காக 2016 யூலையிலிருந்து 2017 பெப்ரவரி வரை செலுத்த வேண்டியிருந்த பணம் ரூபா 1,087,481 ஆகும்.

(iv) 2017 சனவரி மாதத்திலிருந்து புதிய இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலாளர்களுக்கு புலமைப் பரிசில் செலுத்தல்**

---

ஐந்தாம் தர புலமைப்பரிசிலாளர்களுக்கு புலமைப்பரிசில்களைச் செலுத்துவது சம்பந்தமாக கல்வி அமைச்சு செயலாளரால் 2006 யூன் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 2006/27 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு உரிய காலப்பகுதியில் கல்வி அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளபடாமை மற்றும் பாடசாலைகளிடமிருந்து வவுச்சர்கள் கிடைக்காமை ஆகிய காரணங்களால் 2015 ஆம் ஆண்டிற்காக 09 தேசிய பாடசாலைகளுக்கு ரூபா 211,000 பெறுமதியான புலமைப்பரிசில்களும் 2016 ஆம் ஆண்டிற்காக 28 தேசிய பாடசாலைகளுக்கான புலமைப்பரிசில்களும் மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் கணனிமயயப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் புலமைப்பரிசில் பெறவேண்டியவருக்கே உரிய புலமைப்பரிசிலை கிடைக்குமாறான ஒரு முறைமை தயாரிக்கப்படுகின்றமை தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) சீருடைகளும் வவுச்சர்களும்**

---

1993 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இடைவிடாது நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடைக்காக புடவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டின் போது வவுச்சர் முறைமைக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(i) 2016 ஆம் ஆண்டிற்காக சீருடைத்துணிகளுக்குப் பதிலாக வவுச்சர்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையானது 2015 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 4,342,381 ஆக அடையாளம் காணப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் எண்ணிக்கையான 4,520,878 இனை விட 4 வீதம் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) வவுச்சர்களுக்காக வங்கி மூலம் செலுத்தப்பட்ட பணம் மற்றும் அச்சிடலுக்கும் பகிரங்கப்படுத்தலுக்குமான செலவுகளை உள்ளடக்கிய மொத்த செலவுகள் ரூபா 2,298,059,382 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| **ஆண்டு** | **நலன் பெறுனர்களின் எண்ணிக்கை** | **செலவு** | **ஒரு மாணவனுக்கான கிரயம்** | **ஒரு மாணவருக்கான கிரயம் 2015 ஆம் ஆண்டை விட அதிகரித்தல்** |
|---|---|---|---|---|
| --------- | ------------ | ------------ | -------------- | ------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 2016 | 4,342,381 | 2,298,059,382 | 529.22 | 74.98 |

இதற்கிணங்க சீருடைத் துணிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது ஒரு நலன்பெறுனருக்குச் செலவு செய்யப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடுகையில் வவுச்சருக்காக ஒரு நலன்பெறுனருக்கு செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 74.98 சதவீதத்தால் அல்லது 16.51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சீருடைக்கான துணிகளை வழங்கும் போது 2014 ஆம் ஆண்டிற்காக செலவு செய்யப்பட்ட மொத்தப் பணம் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38.77 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.46 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது வவுச்சர்களைப் பகிர்ந்தளிப்பதற்காக செலவு செய்யப்பட்ட பணம் 2015 ஆம் ஆண்டில் சீருடைத்துணிகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தை விட 11.91 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iv) சீருடைகளைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறை 2015 ஆம் ஆண்டிலிருந்து முடிவுறுத்தப்பட்டிருந்தும் அந்நடைமுறைகளுக்குரிய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்காது வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கும் நடைமுறைகளுக்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தீர்த்து வைக்கப்படாத பிரச்சனைகளில் சில கீழே தரப்படுகின்றன.

- கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களிகன் பிரகாரம் வெள்ளம் மற்றும் மண் சரிவுகளின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் ரூபா 675,296,036 பெறுமதியான பாடசாலை மற்றும் பிரிவெனாக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு பொருத்தமான சீருடை மற்றும் சிவுரு துணிகளின் 2,683,716 பக்கட்டுக்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஒருகொடவத்த களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. இந்த இருப்புக்களுள் 2015 ஆம் ஆண்டிற்காக 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி ஒருகொடவத்த சீருடைக் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 26,670,992 பெறுமதியான பெரிய சிவுரு துணிகளின் 16,400 பக்கட்டுக்களும் உள்ளடங்கியிருந்தன. சிவுரு துணிகளை தவிர்த்து ஏனைய சீருடைத் துணிகள் தற்பொழுது பகிர்ந்தளித்து பூர்த்தி செய்யப்படாததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

- 2016 ஆம் ஆண்டிற்காக பாடசாலை மற்றும் பிரிவெனாக்களின் 4,342,381 மாணவர்களுக்கு சீருடைக்காக வவுச்சர்கள் பகிர்ந்தளித்தல் 2016 பெப்ரவரியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியில் களஞ்சியத்தில் மிகுதியாக இருந்த சீருடை மற்றும் சிவுரு துணிப் பக்கட்டுக்களின் அளவு 2,865,992 ஆகும். இவற்றுள் 817,757 ஆண் மாணவர்களுக்கு காற்சட்டை மற்றும் சட்டைத்துணிகளும் 412,203 மாணவிகளுக்கு கவுன் துணிகளுமாகும்.

(v) 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,616,569,960 பெறுமதியான வவுச்சர்கள் அச்சிடப்பட்டிருந்தும் வலய அலுவலகத்தினூடாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட அளவின் பெறுமதி ரூபா 2,414,076,750 ஆகும். அதற்கிணங்க ரூபா 202,493,210 பெறுமதியான வவுச்சர்கள் அமைச்சில் மிகுதியாகக் காணப்பட்டன. வழங்கப்பட்ட வவுச்சர்களுக்காக வங்கியின் மூலம் செலுத்தப்பட்ட பணம் ரூபா 2,267,609,204 ஆக இருந்ததனால் ரூபா 146,467,546 பெறுமதியான வவுச்சர்கள் வலய அலுவலகம், ஆசிரியர்கள் அல்லது மாணவர்களுக்கிடையே வைத்திருக்கப்பட்டன. கூட்டுமொத்தமாக 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட முழுமையான வவுச்சர்களில் ரூபா 348,960,756 பெறுமதியான வவுச்சர்கள் மிகுதியாக இருந்தன.

(vi) பாடசாலை மாணவர்களுக்கு வவுச்சர்கள் கிடைக்காமை தொடர்பாக எதுவித முறைப்பாடும் செய்யப்படவில்லை என அமைச்சினால் தெரியப்படுத்தியிருந்த போதிலும் கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் பிரகாரம் ஒரு பாடசாலையின் பெறுமதி ரூபா 54,750 தொகையானது பகிரப்படாத 199 வவுச்சராக இருந்தது எனவும் அவ்வாறான நிலைமையின் காரணமாக வலய மட்டத்தில் வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல் முறைப்படியாக மேர்பார்வை செய்யப்படவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(vii) அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல் எதிர்பாக்கப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட வவுச்சர்களில் ரூபா 146,467,546 பெறுமதியான வவுச்சர்கள் வங்கிக்கு சமர்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக உரிய மாணவர்களின் சீருடைத் தேவைப்பாடானது எதிர்பாக்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(உ) கல்வி முகாமைத்துவ தகவல்முறைமை**

---

ஆசிரியர் தகவல்களை உள்ளடக்கிய தரவு அடிப்படையை (Data Base) தயாரித்துக் கொள்வதும் அதனோடு இணைந்த ஆசிரியர் சேவை முகாமைத்துவத்திற்கும் ஆசிரியர்களுக்கும் அலுவல முகாமைக்கும் தேவையான சேவைகளை வழங்குதல் ஆகிய குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவியுடன் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS) தேற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2011 மார்ச் மாதத்திலிருந்து 2014 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது அறிவாற்றலுள்ள ஒரு சமூகத்திற்கான கல்விச் செயற்திட்ட (EKSP) நிதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணம் ரூபா 64,060,373 ஆகும்.

2012 பெப்ரவரி 27 ஆந்திகதி கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 900,000 (வரியின்றி) தொகைக்கு இதன் முதலாவது கட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான தரவு முறையைத் தோற்றுவித்தலானது மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

2013 யூன் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது கட்டத்தின் கீழ் முதலாவது குறிப்பிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒன்பது மொடியூல்களை உருவாக்கி

வழங்குவதற்கு இணக்கமளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 13,877,100 (வரியின்றி) பணம் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

தற்பொழுது நான்கு ஆண்டுகளுக்கு மேல் பழமையான அம் முறைமையை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரை முடியாதிருந்ததுடன் தொழிநுட்ப நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ள விசேட நிபுணராக இச்செயற்திட்டத்தில் பெறுப்புதாரியாகச் செயற்பட்டு வரும் உத்தியோகத்தர்களின் ஈடுபாடானது மிகவும் குறைந்தவை என்பதுவும் தாமதித்தவை என்பதுவும் இதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஊ) பாடசாலைப் பாடப்புத்தகங்களை அச்சிடலும் பகிந்தளித்தலும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கல்வி வெளியிட்டுத் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டின் போது பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக மேற்கொண்ட செலவு ரூபா 3,888 ஆக இருந்தது. 315 வகையான புத்தகங்களின் 30,033,000 பிரதிகளை அச்சிடுவதற்காக அதில் ரூபா 2,985 தொகை 22 தனியார் அச்சகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த அச்சிடல் செலவில் 77 சதவீதமாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ii) செயற்கைத் தாள்களால் பாடப்புத்தகங்களை அச்சிடும் முன்னோடிச் செயற்திட்டம்**

---

இச்செயற்திட்டத்திற்காக 2016 யூன் 20 ஆந்திகதிய 2016/ED/E/22 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் அமைச்சரவையின் அங்கீகாரமானது அதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டே வழங்கப்பட்டிருந்தது. அதற்காக நிதி அமைச்சினால் சமர்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தி சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டிருந்த போதிலும் சாத்திய வள ஆய்வின் போது அந்த அவதானிப்புக்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

- 200 தாள் பாடப்புத்தகத்தை அச்சிடுவதற்கான ஒரு அலகு கிரயம் ரூபா 320 எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 83 பக்க பாடப்புத்தகத்திற்கான உள்ளபடியான வரியற்ற விலை ரூபா 305.55 ஆக இருந்தது.

- தற்பொழுது காணப்படுகின்ற பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக இவ்வாறான செயற்கைத் தாள்களினாலான பாடப்புத்தகங்களைப் பயன்படுத்துவதற்குள்ள தேவைப்பாடு தொடர்பான வேண்டுகோள் அல்லது தேவைப்பாட்டை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது என்பதற்கான சான்று சாத்திய வள ஆய்வு அறிக்கையிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- தற்பொழுது காணப்படுகின்ற பாடப்புத்தகங்களின் தரம் மற்றும் நீண்டகாலம் இருக்கும் தன்மை சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததா என்பதனை விசாரித்து அறிய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறான ஆய்வு செய்யப்பட்டமைக்கோ அல்லது தரம் மற்றும் நீண்ட காலம் இருக்கும் தன்மை சம்பந்தமாக முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாமைக்கோ சான்றுகள் காணப்படவில்லை.

- செயற்கையான கடதாசிகளைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கம் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்களை அப்புறப்படுத்தும் முறைமை தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனவும் நிதி அமைச்சரால் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் இப்பாடப்புத்தகங்களை அப்புறப்படுத்துவதற்காக காணப்படுகின்ற முறைமை என்ன என்பதை சாத்திய வள ஆய்வின் போது இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

- **7ஆம் தரத்திற்காக புவியியல் புத்தகங்களை அச்சிடல்**

  -----------------------------------------------------------------------------------------

  7ஆம் தரத்திற்கான புவியியல் புத்தகத்தை அச்சிடுவதற்காக ஒரு புத்தகத்திற்கு வரியற்ற விலையாக கீழே குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**விலைகள்**

| **புத்தகம்** | **சாதாரண கடதாசி (2016 யூன் 16 ஆந் திகதி கோரப்பட்ட விலை மனுக்களின் பிரகாரம்)** | **செயற்கைக் கடதாசி (2016 திசெம்பர் 06 ஆந் திகதி கோரப்பட்ட விலை மனுக்களின் பிரகாரம்)** | **வித்தியாசம்** | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| சிங்களமொழி | 45.69 | 305.55 | 259.86 | 568.75 |
| தமிழ்மொழி | 69.52 | 317.00 | 247.48 | 355.98 |
| ஆங்கிலமொழி | 43.54 | 290.00 | 246.46 | 566.05 |

- இதன் பிரகாரம் பார்க்கையில் செயற்கை கடதாசியால் ஒரு புத்தகத்தை அச்சிடுவதற்காக செய்யப்பட்ட கிரயத்தை சாதாரண கடதாசியில் ஒரு புத்தகத்தை அச்சிடும் போது மேற்கொள்ளப்படுகின்ற கிரயத்துடன் ஒப்பிடுகையில் 356 சதவீதத்திலிருந்து 569 சதவீம் வரையான வீச்சில் மிகவும் அதிக கிரயத்தைக் கொண்டிருந்தது.

- முதலாவது அச்சிடலின் பின்னர் அச்சிடல் செலவின் வித்தியாசம் ரூபா 128,939,700 ஆக இருந்ததுடன் அது இப்புத்தகங்களை செயற்கைக் கடதாசியால் அச்சிட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மேலதிகக் கிரயம் அல்லது நட்டமாக அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| மொழி | புத்தகங்களின் எண்ணிக்கை | செயற்கைக் கடதாசியால் | | சாதாரண கடதாசியால் | | வித்தியாசம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | புத்தகத்தின் விலை | மொத்தப் பெறுமதி | புத்தகத்தி ன் விலை | மொத்தப் பெறுமதி | புத்தகத்தின் விலை | மொத்தப் பெறுமதி |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சிங்களம் | 325,000 | 305.55 | 99,303,750 | 45.69 | 14,849,250 | 259.86 | 84,454,500 |
| தமிழ் | 120,000 | 317.00 | 38,040,000 | 69.52 | 8,342,400 | 247.48 | 29,697,600 |
| ஆங்கிலம் | 60,000 | 290.00 | 17,400,000 | 43.54 | 2,612,400 | 246.46 | 14,787,600 |
| | | | 154,743,750 | | 25,804,050 | | 128,939,700 |

### 3.17 கொள்வனவு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் நான்கு மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 97 மில்லியனுக்கு ஒரு ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான மொத்தச் செலவை தீர்த்து வைப்பதற்காக உரிய பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கிலும் நிலையான வைப்பிலும் ரூபா 137 மில்லியன் உள்ளதாக அதிபர் தெரிவித்தார்.அதற்கிணங்க மேலும் ரூபா 40 மில்லியன் பணத்தை மிகுதியாக்கிக் கொள்ள முடிந்த போதிலும் அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திலும் அந்நிர்மாணத்திற்காக ரூபா 63.5 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கானவை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நுகேகொடை அனுலா வித்தியாலயத்தில் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக மூன்றாவது ஒப்பந்தகாரருக்கு 2010 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 14,008,988 பெறுமதியான (பெறுமதி சேர் வரியின்றி) ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் 2010 நவம்பர் 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2011 யூன் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பல சந்தர்பங்களில் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 8,098,360 ஆக இருந்தது. உரிய வித்தியாலயத்திலிருந்து இதற்காக ரூபா 25,600,000 பணம் அமைச்சில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 17,364,881 அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. பத்து

ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தாமதத்தின் காரணமாக பொருட்களின் விலை மாற்றங்களாலான நட்டத்திற்கு நிர்மாணிக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதிப்புக்களாலும் ஏற்படுகின்ற நட்டத்திற்கு உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூற வேண்டுமென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) கிருலப்பனை இசிபதன வித்தியாலயத்தில் நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 43,400,503 ஒப்பந்த பெறுமதிக்கு ஒரு ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. 2014 யூலை 29 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 280 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. செய்யப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதியான ரூபா 33,035,295 தொகையை உரிய ஒப்பந்தகாரருக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் தாமத காலம் தொடர்பாக எதுவித அறவீடும் செய்யப்பட்டதற்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 7,227.6 மில்லியன் தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் திருத்திய திட்டத்தின் பிரகாரம் அது ரூபா 4,681.36 மில்லியன் எனவும் ஆண்டின் போது கொள்வனவுக்காக ரூபா 1,854.3 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 2,315.35 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்காக கடப்பாடு செய்யப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டது.

## 3.18 உள்நாட்டு நிதி உதவி மூலமான செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காமை தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் நிதியத்திற்காக கொழும்பு மஹானாமை ஆண்கள் தேசியப் பாடசாலையால் சேகரிக்கப்பட்ட ரூபா 6,000,000 பணம் 2007 திசெம்பர் 19 ஆம் திகதி நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த முதலீட்டின் பெறுமதி ரூபா 22,532,809 ஆக இருந்தது. எவ்வாறாயினும் 2017 யூலை 21 ஆந் திகதி வரையும் உரிய நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.19 வாகனப் பயன்பாடு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்வி அமைச்சுக்கு சொந்தமான அனைத்து வகையைச் சார்ந்த 147 வாகனங்கள் காணப்பட்டதுடன் இவற்றில் 17 வாகனங்கள் பாவனைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. அவற்றில் 71 வாகனங்களுக்கு கல்வி அமைச்சின் உரிமையாண்மை காணப்பட்ட போதிலும் அமைச்சில் காணப்படாதிருந்ததுடன் அமைச்சிற்கு சொந்தமில்லாத 25 வாகனங்கள் அமைச்சின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது 24 வாகன விபத்துக்கள் இடம் பெற்றிருந்தன. அவை சம்பந்தமாக நி.பி 104(4) பிரகாரம் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த சிபாரிசுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

**3.20 மனிதவள முகாமைத்துவம்**

--------------------------------------------

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---------------------------------------------------------------------------------------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 2,636 | 1,019 | 1,617 | -- |
| (ii) | மூன்றாம் மட்டம் | 56,371 | 35,743 | 629 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 647 | 714 | 38 | 105 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 451 | 238 | 30 | 01 |
| (v) | ஏனையவை (அமையம் /தற்காலிகம் / ஒப்பந்த அடிப்படை) | 03 | 01 | 02 | -- |
| | | **59,924** | **37,715** | **2,316** | **107** |

## (ஆ) நியமித்தல், பதவியுயர்த்தல், சம்பளக் கொடுப்பனவு செய்தல்.

---

(i) அரசாங்க சேவையின் சம்பளத்தை மீளமைப்பதற்காக வழங்கப்பட்ட 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு III இல் குறிப்பிடப்பட்ட குறிப்புக்கள் மற்றும் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 06/2006 (II) இன் 04 ஆம் பந்திக்கு முரணான வகையில் 2006 சனவரி 01 ஆந் திகதிக்குப் பின்னர் அமைச்சின் தேசிய பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் என்பவற்றிற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆய்வுகூட ஊழியர்களும் நூல் நிலைய ஊழியர்களும் உரிய பதவிகளில் III ஆம் தரத்தில் அமர்த்தப்பட்டு சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்பப் படிநிலையில் வைத்திருக்க வேண்டிய போதிலும் II ஆம் தரத்தில் வைக்கப்பட்டு 12 ஆவது சம்பள படிநிலை வழங்ப்பட்டிருந்ததுடன் காவலாளி மற்றும் வைத்திசாலை ஊழியர் பதவிகளுக்காகவும் ஆரம்பப் படிநிலைக்குப் பதிலாக 12 ஆவது படிநிலை வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2007 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2009 நவம்பர் 01 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 324 அமைய ஊழியர் பதவிகளுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் அண்ணளவாக (சம்பள ஏற்றங்கள் இன்றி) ரூபா 46,608,520 ஆக இருந்தது.

(iii) தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழு செயலாளரின் 2010 நவம்பர் 10 ஆந் திகதிய NSCC/1/84/TU-2 இலக்க கடிதத்தின் மூலம் 2008 திசெம்பர் 04 , 2009 சனவரி 06 , 2009 மே 18 ஆகிய திகதிய கடிதங்களால் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது புதிய நியமனங்கள் வழங்குமாறு 2009 யூன் 30 ஆந் திகதிய ED/5/67/11/20 ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் மூலம் விளக்கமாகவும் 2006 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களை சரியான சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்துமாறும் இவ்வாறான பிழையான தீர்மானத்தின் மூலம் செலுத்த வேண்டியிருந்த மேலதிக சம்பளத்தை உரிய அறிவுறுத்தலை வழங்கிய உத்தியோகத்தரிடமிருந்து மிகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள்

தொடர்பாக ஆணைக்குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் தெரிவிக்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் அலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆளணி நடைமுறை விதிகளின் XVIII ஆவது அத்தியாயத்தின் 193 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தரும் இடமாற்றத்திற்கு உட்படுவதுடன் அந்த இடமாற்றங்களுக்கும் தாபன விதிக்கோவையின் III ஆவது அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளுக்கும் முரணான வகையில் செயற்பட்டு கல்வி அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியினர்களுக்கு இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் விபரம் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

| **சேவை** | **உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை** | **காலம் (ஆண்டு)** | **அமைச்சுக்கு சேவைக்கு சமூகமளித்த காலம்** |
|---|---|---|---|
| கல்வி நிர்வாகம் | | சமர்ப்பிக்கப்படவில்லை | |
| இலங்கை நிருவாக சேவை | 03 | 04 இலிருந்து 05 வரை | 2011/2012 |
| இலங்கை கணக்காளர் சேவை | 04 | 05 இலிருந்து 17 வரை | 2000/2012 |
| இலங்கை பொறியியலாளர் சேவை | 02 | 11 இற்கு மேல் | 2006/2007 |
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பசேவை | 08 | 05 இலிருந்து 23 வரை | 1993/2012 |
| அரசாங்க முகாமைத்துவ சேவை (i) | 12 | 05 இலிருந்து 07 வரை | 2009/2012 |
| அரசாங்க முகாமைத்துவ சேவை (ii) | 16 | 04 இலிருந்து 08 வரை | 2008/2012 |
| அரசாங்க முகாமைத்துவ சேவை (iii) | 05 | 04 இலிருந்து 06 வரை | 2010/2012 |
| அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் | 96 | 11 இற்கு மேல் | 2005/2017 |
| ஆவண உதவி உத்தியோகத்தர் | 45 | 16 இற்கு மேல் | 2000/2016 |
| நிதி உதவியாளர் | 12 | 11 இற்கு மேல் | 2005/2016 |
| | 203 | | |